**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்), விழுப்புரம்.**

O.S. 17/2020

Date:21.02.2023

**வா.சா.1**

**பெயர் காயத்திரி**

சாட்சி அனுமதி பேரில் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் பிஎஸ்சி படித்துள்ளேன். நான் எனக்காகவும், எனது மகளுக்காகவும் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எனது மகள் மேஜர் ஆனதால் காப்பாளர் பொறுப்பில் இருந்து என்னை நீக்க மனு செய்து மனு அனுமதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது மகள் தன்னை மேஜராக அங்கீகரிக்க தாக்கல் செய்த மனுவோடு பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதில் இந்த வழக்கை தான் மற்றவர்களின் செல்வாக்கிற்கு ஆட்படாமல் எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். மேலும் காப்பாளர் பொறுப்பில் இருந்து என்னை நீக்க வேண்டும் என்றும் மனுவில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு மனு தாக்கல் செய்த நிலையில் நான் அவருக்காக சாட்சியம் அளிக்க முடியாது என்றால் சரியல்ல. எனது மகள் சார்பில் தனியாக வக்காலத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் இருவருக்கும் ஒரே வழக்கறிஞர்தான். திருத்தப்பட்ட பிராதில் 2 ம் வாதியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். 2 ம் வாதியின் கையொப்பம் இல்லாதநிலையில் நான் சாட்சியம் அளிக்க இயலாது என்றால் சரியல்ல. 2 ம் வாதி 2 ம் பிரதிவாதியுடன் சுமூகமான உறவில் உள்ளார் என்றும், அவருடன் பேசி வருகிறார் என்றும் சொன்னால் சரியல்ல. 2 ம் வாதி நான் எவ்வித கையொப்பமும் வழக்கில் செய்யவில்லை என்று 2 ம் பிரதிவாதியிடம் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. வழக்க நடத்த தனக்கு விருப்பம் இல்லை என்று 2 ம் வாதி 2 ம் பிரதிவாதியிடம் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. 2 ம் வாதியின் விருப்பம் இல்லாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 2 ம் வாதி பிகாம் சிஏ 3 ம் ஆண்டு திருச்சியில் படித்து வருகிறார். நான் இன்று சாட்சி சொல்ல வருவது 2 ம் வாதிக்கு தெரியுமா என்றால் தெரியும். வக்காலத்தில் 2 ம் வாதி எங்கு வைத்து கையொப்பம் போட்டார் என்றால் எனது மகள் காலேஜ்யில் இருந்து திருத்துறைபூண்டியில் உள்ள எனது வீட்டிற்கு வந்திருந்த போது எங்களது வழக்கறிஞர் அனுப்பி வைத்திருந்த வக்காலத்தில் கையொப்பம் போட்டார். வக்காலத்தில் உள்ளது 2 ம் வாதியின் கையொப்பமே அல்ல என்றால் சரியல்ல. எத்தனை அயிட்ட சொத்தை பொறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எத்தனை இலக்க சொத்துக்கள் என்று எனக்கு தெரியாது. சொத்துக்களின் மதிப்பு

எவ்வளவு என்றால் பிராதில் 2 கோடி என்று சொல்லியுள்ளோம். அந்த சொத்துக்கள் 1, 2 பிரதிவாதிகளுக்கு உரிமையான சொத்துக்கள் என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் அவர்களுக்கு பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகளுக்கு தாயாரும், சகோதரர்களும் இருக்கிறார்கள் என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகளின் தாயார் மற்றும் சகோதரர்களை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகளின் தாயார் மற்றும் சகோதரர்கள் இவ்வழக்கிற்கு அவசியமான தரப்பினர்கள் என்றும், அவர்களை கட்சி சேர்க்காததால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் 1, 2 பிரதிவாதிகளுக்கு பாகம் பிரிக்காத சொத்துக்கள் என்பதால் அதில் பாகம் கோர எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி உயிரோடு உள்ள நிலையில் பாகம் கோர எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. பாகம் பிரிக்கப்படாத சொத்துக்களில் ஜார்ச் ஏற்படுத்த முடியாது என்றும், அந்த பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. நான் விவாகரத்து கோரி மன்னார்குடி குடும்ப நல நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கிலும் வாழ்க்கை பொருளுதவி கோரியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வழக்கில் இடைக்கால ஜீவனாம்சம் உத்தரவாகியுள்ளது என்றால் சரிதான். அந்த உத்தரவு பேரில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் 2ம் பிரதிவாதி மேல்முறையீடு செய்து தடையாணை பெற்றுள்ளார் என்றால் சரிதான். தடையாணை உத்தரவு நிபந்தனை படி 2ம் பிரதிவாதி இடைக்கால நிவாரணமாக ரூ. 4 லட்சம் எனக்கு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராதை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். பிராதில் 1 முதல் 5 வரை பரிகாரங்கள் 2ம் வாதிக்காக கோரப்பட்டவை என்றால் சரிதான். 6வது பரிகாரம் எனக்கானது என்றால் சரிதான். என்னுடைய சீர்வரிசை மற்றம் சீதனப்பொருட்கள் 2ம் பிரதிவாதி கொடுக்க வேண்டும் என்று திருத்துறைபூண்டி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்து அவைகளை திரும்ப பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். எனது சீர்வரிசை மற்றும் சீதனப்பொருட்கள் என்னிடம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். எனது கணவர் வீட்டில் இருந்து எனக்கு போட்ட நகைகளை நான் திரும்ப கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் வீட்டில் இருந்து எந்த நகையும் போடவில்லை. எனது பெற்றோருக்கு எவ்வளவு நிலங்கள் உள்ளது என்றால் நில உச்சவரம்பு சட்டப்படி அரசு எடுத்துக்கொண்டதுபோக மீதி நிலங்கள் உள்ளது. அந்த சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். அந்த சொத்துக்களில் எனக்கு உரிமை உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. எனது தகப்பனாருக்கும் அவரது உடன் பிறந்தவர்களுக்கும் பூர்வீக சொத்து தொடர்பாக வழக்கு நடந்தது என்றால் சரிதான்.அவ்வழக்கில் நான் சாட்சியம் அளிக்கவில்லை. ஆனால் நான் ஆவணங்களில் கையொப்பம் போட்டேன். என்ன ஆவணம் என்றால் பேரன்,

பேத்திகள் எல்லோரும் கையொப்பம் போட்டார்கள். என்ன ஆவணம் என்று தற்போது நினைவில்லை. எனது சகோதரர்கள் கையொப்பம் போட்டார்களா என்று எனக்கு தெரியாது. நானும் கையொப்பம் போடவேண்டும் என்று நீதிபதி சொன்னதால் கையொப்பம் போட்டேன். அந்த காலகட்டத்தில் எனது கணவருடன் அவரது வீட்டில் இருந்தேன் என்றால் சரிதான். அதன் பிறகு நான் எனது மகளை அழைத்துகொண்டு நானாகவே எனது பெற்றோர் வீட்டிற்கு வந்துவிட்டேன் என்றால் நான் ஆவணத்தில் கையொப்பம் போட்டு சென்றவுடன் நான் சொத்து வாங்கி வரவேண்டும் என்று எனது கணவர் 20 நாட்கள் தொடர்ந்து என்னை துன்புறுத்தியதால் நான் எனது பெற்றோர் வீட்டிற்கு வந்துவிட்டேன். பிராதில் இந்த விவரங்களை சொல்லியுள்ளேனா என்றால் சுருக்கமாக சொல்லியுள்ளேன். நான் கோரியுள்ள பரிகாரம் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றும், எனது மகளுக்காக பரிகாரம் கோரமுடியாது என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.